1982 பிப்ரவரி 18]

காஞ்சிபுரம் ஒரிகை தொழிற்பேட்டை.

*வினா எண் 243—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண் புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஒரிகை தொழிற்பேட்டைக்கு எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது?

(ஆ) எத்தனை தொழிற்கூடங்கள் இப்பொழுது பயன் படுத்தப்பட்டு வருகின்றன?

(இ) மீதமுள்ள இடத்தில் கூடுதலான தொழிற்கூடங்கள் அமைக்க அரசு செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) காஞ்சிபுரம் ஒரிகை தொழிற்பேட்டைக்கு 37.43 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டது.

(ஆ) 4 வாடகை தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(இ) மீதமுள்ள 28.36 ஏக்கர் நிலத்தை செம்மைப்படுத்தி சீர்திருத்தப்பட்ட மனைகளாக மாற்றி அமைத்து, தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்ய சிட்கோ அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: இந்த ஒரிகை தொழிற் பேட்டை 1969-ல் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை வளர்ச்சி பெற முடியாததொரு சூழ்நிலையில் இருக்கிறது. அதன் வளர்ச்சியைக் கருதி இந்தப் பகுதியை பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: நான்கு தொழிற்பேட்டை களை நடத்துவதாகக் கூறினார்கள். அந்த நான்கு தொழிற் பட்டைகளும் அவற்றிற்கு கிடைக்க வேண்டிய அரசு உதவியைப் பெறமுடியாமல் இருக்கிற சூழ்நிலை இருப்பதால் அவர்களது சங்கடங்களை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: காஞ்சிபுரம் தொழிற்பேட்டையைத் துவங்குவதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவதற்கு முன்பு அந்த இடங்களையெல்லாம் சுற்றிப்பார்த்து, பல முக்கியமான இடங்களைச் சுற்றிப்பார்த்து, அவர்கள் இறுதிநாட்களுக்கு முன்னால் கடைசியாக இந்த இடத்தைப் பார்த்துவிட்டு சென்னை

வந்தார்கள். பிறகு காஞ்சிபுரம் போகவில்லை. ஆகவே அண்ணா அவர்கள் கனவு கண்ட அந்தத் தொழிற்பேட்டையில் அதிகக் கவனம் செலுத்தி அது வளர ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் அந்தத் தொழிற்பேட்டையை மேலும் செம்மைப்படுத்த தமிழக அரசு ரூ. 5.39 இலட்சம் அதற்காக ஒதுக்கீடு செய்து அதை வளர்க்க இன்றைக்கு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

ஆலய ஊழியர்களின் சம்பள விகிதங்கள்.

*வினா எண் 244—திரு. என் இடப்பன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலய ஊழியர்களின் சம்பள விகிதம் அண்மையில் மாற்றியமைக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை @அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: அவை முன் வைக்கப் பட்டுள்ள அறிக்கையில் பணக்கார சுவாமிகளைப்பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஏழை சுவாமிகளைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. வருமானம் குறைவாக உள்ள சில கோவில்களில் வேலை செய்கிற ஊழியர்கள் ரூ. 5,6,7,10, என்று ஊதியம் பெறுகிறார்கள். ஆகவே அந்த ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க அந்தக் கோவில்களுக்கு வருமானம் இல்லாவிட்டாலும் பக்கத்தில் உள்ள கோவில்களோடு அவற்றை இணைத்து அதிகப்படியாக சம்பளம் அல்லது ஊதியம் கொடுக்க அரசு விசேஷ ஏற்பாடுகளைச் செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பணக்கார சுவாமிகளிடத்தில் பணம் இருக்கிற காரணத்தால்தான் அதை எடுத்து அலுவலர்களுக்கு ஊதியம் தருகிறார்கள். பணம் இல்லாத சுவாமிகளிடத்தில் பணம் இல்லாத காரணத்தால் குறைந்த சம்பளம் தருகிறார்கள். எப்படியும் எந்த அடிப்படையிலும் குறைந்தபட்சம் ரூ. 100க்குக் குறையாமல் இருக்கவேண்டும் என்று பார்த்துக் கொள்ளப்படுகிறது. இன்னொரு கோவிலில் இருந்து எடுத்துக் கொடுப்பது என்று ஆரம்பித்தால் சில நூறு ஆலயங்களுக்குக்கூட அப்படி பணம் கொடுக்க முடியாது. ஆயிரக்கணக்கான ஆலயங்கள் பணம் இல்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கின்றன.

@ 422-424ம் பக்கங்களில் இணைப்பு Iஆக அச்சிடப்பெற்றுள்ளது.